# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,501 — 1965 සැප්තැම්බර් 9 වැනි බ්‍රහස්පතින්දා — 1965.9.9

14,501 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 9 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 293 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 296 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 296 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 300 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குப்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாளவீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்டு/இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம்/பரீட்சாகாலம் ஏதும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டால் ஒழிய 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ம் இல. அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொணடுவருதற்கு இனிச் செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு இயைய நடத்தல் வேண்டும்.

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சைகால முடிவில் அவர்களின் நியமன ஊர்ஜிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட ஆளாவர்; ஆனால் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுவதற்கு மனப்பூர்வமாக முயற்சித்திருக்கிறார் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாரானால் குறித்த பதவி நீக்கம் பின்போடப்படலாம். உரிய திகதிக்குப்பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாரானால், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

குறிப்பு.—"புது உத்தியோகத்தர்" என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சுற்றுநிருபத்தின் உபபந்திகள் 2 (ii) (B), 2 (ii) (C) என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. **வேண்டியதகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **பிற விதிகள்.**—(i) அரசாங்க சேவையிலுள்ள தகைமையுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் அன்னவரின் திணைக்களத்தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய உத்தியோகத்தர் விணணபபத்தின் பிரதி ஒனறை அரசாஙக சேவை ஆணைககுழுவின் செயலாளருககு நேராக, முடிவுத் திகதியிலனறோ அதன் முனனரோ அதனைப் பெறக்கூடியதாக அனுப்புதல் வேணடும். அரசாஙக சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உததியோகத்தர்களது விண்ணப்பஙகளை திணைக்களத் தலைவர்கள் அனுப்பும்போது குறித்த விணணப்பதாரர்கள் (தெரிவு செய்யப்பட்டால்) விடுவிககபபடுவாாகளா அனறு எனபதை கருமமுறைக் கைநூலின் 109 ஆம் பரிபாலன ஒழுஙகின பிரகாரம் குறிப்பிடல் வேணடும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருககவேணடும் எனறு பரீட்சார்ததிகள விதிககபபடலாம். இதுவிடயமாகப் பிரயாணச்செலவோ வேறெவவகையான செலவோ கொடுககபபடமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திககு குணநலவததாட்சிப் பத்திரம் ஒனறைக் கொடுத்துச் சிபாரிசு செயயலாம். ஆனால் குறிததவோா பரீட்சார்ததி விடயததில் தலையிட்டு, அவருக்கு ஆதரவுதேட முயறசிததால் அது அப்பரீடசார்த்திக்குத் தகைமையினமையை உணடாககிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுததிருபபின, அது தெரிவுககு முனனா கணடுபிடிககப்படின, அப்பரீட்சாாத்திககுத் தகைமையீனம் உணடாகிவிடும். தெரிவுககுப பின்னர் கணடுபிடிககபபடடால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிககபபடும்.

8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் எனபது நிலையான அடிபபடைச் சம்பளததையே குறிககும். பதிற் சேவைச் சமபளம் வேறும் படிகள முதலியவை சம்பளத்துடன் அடஙகாது.

---

## பொலிசுப் பகுதி

### பொலிசுச் சாரதிப் பதவிகள்

பொலிசுப் பகுதியில் சாரதிப் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் **ஏழ்ககாணும் மாதிரிப் படிவத்தில்** களுத்துறையில் உள்ள பொலிசுப் பயிற்சிக் கலாசாலை அதிபருககு விலாசமிட்டு 27.9.65 திகதிக்கு முன்பாக, பதிவுத தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் தபால் உறையில இடபபக்கத்தின் மேற் புறத்தில் " பொலிஸ் சாரதிக்காக விண்ணபபம் " என்று குறிக்கப்படல் வேண்டும்.

2. **வேதனம்.**—சேர்ந்தவுடன் வருடம் ஒன்றுக்கு ரூ. 750, ஒரு வருட சேவையின பின ரூ. 840, பின வருடா வருடம் ரூ. 42 விகிதம் 22 வருடாந்த உயர்வுகளுடன் ரூ. 1764 வரை உயரும். ரூ. 1,050, ரூ. 1,260, ரூ. 1,470, ரூ. 1,638, வருடாந்த வேதனத்தை அடையமுன் வினைத் திறமைகாண் தடைகள் உண்டு.

3. **வேண்டப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வருவனவறறிற்குத் திருப்திகரமான சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 1966 ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி 25 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும், இருத்தல் வேண்டும். மாஜி இராணுவத்தினருக்கும், இலஙகையிலுள்ள பிரிட்டிஸ் கடற்படையிலிருந்து விலக்கப்பட்டவர்களுககும் வயதுச் சலுகையுண்டு. பொலிஸ் பகுதியில தற்பொழுது கடமையாற்றுவோருக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது.

(இ) சிங்களம்/தமிழ் அல்லது ஆங்கிலத்தில் அரசாங்க வித்தியாபகுதியினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில குறைந்தது 7 ம் வகுப்புச் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்கத்தில் கடமையாறறும் விண்ணப்பதாரிகளுக்கு, இக் குறைந்த பட்சக் கல்வித்தகைமைக்கட்டுப்பாடு எனது பரிசீலனையினபின் தளர்த்தப்படும்.

(ஈ) வாகனங்கள் செலுத்துவதற்கான உத்தரவுச் சீட்டைப் பெற்றபின் நானகு வருட அனுபவததோடு குற்றங்கள எதும் ஏற்பட்டிராத வண்டி செலுத்தும் உத்தரவுச சீட்டைப் பெற்றிருக்கவேண்டும்.

மோட்டார் பொறி நுட்பத்தில் அறிவுள்ளவர்கட்கும், எல்லா வித மோட்டார் வாகனஙகளையும் இயக்கத்தகுந்த வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டுப்பெற்றவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கபபடும்.

(உ) விண்ணப்பதாரிகள் விவாகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். மாஜி இராணுவத்தினருக்கும், இலங்கைப் பிரிட்டிஸ் கடற்படையிலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கும் இக்கட்டுப்பாடு அமையாது.

(ஊ) உயரத்தில் 5 அடி 3 அங்குலத்திற்குக் குறைந்தவர்களாக இருத்தல் கூடாது.

4. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றில் பரீட்சிக்கப்படுவார்கள் :—

(1) வாகனங்களை ஓட்டுவதிலும் உதவைப்பாவனை செய்வதிலும்,

(2) வீதி ஒழுங்குகள்பற்றி பரீட்சார்த்திகளின் அறிவு, பரீட்சாத்திகளால் தெரிவு செயயப்பட்ட வாகனஙகளைப்பற்றிய அடிப்படை இயந்திர அறிவும் போக்குவரத்து கைகாட்டுமுறையும்,

(3) அவர்களுடைய கல்வித்தராதரத்தைப்பற்றியும்.

குறிப்பு —நேர்முகப்பரீட்சைககு அழைக்கப்படுபவர்களுக்குப் போக்குவரததுச்செலவு கொடுபடமாட்டாது.

5. நியமனத்திற்கு முன்பு எல்லா விண்ணப்பதாரர்களும் வைத்தியப் பரிசோதனையில் தகுதியுடையவர்களாகக் காணப்படல் வேண்டும். ஒருவர் இலங்கையில் எப்பகுதியிலும் சேவை செய்வதற்கு தகுதியுடையவரென்று தீர்மானிக்கபபட்டிருந்தாலும் அங்கவீனத்தாலோ அல்லது வேறு சரீரக் குறைபாடுகளாலோ பாதிககப்பட்டவராயிருந்தால் அக்குறைகள் அவருடைய நாளாந்த சாரதி வேலையை திறமையாகச் செய்வதற்குத் தடையாக இருக்குமாதலால் அவர் நியமனம் செய்யப்படமாட்டார்.

6. **பயிற்சிக் காலம்.**—பொலிசுச் சாரதியின் பயிற்சிக்காலம் 5 வாரமாகும். இப்பயிற்சியின் இறுதியில் பின்வருவனவற்றில் தேர்ச்சியடைய வேண்டும்:—

(அ) ஓட்டுதல் (ஆ) பொது வீதி விதிகள்.

(2) மோட்டார் பொறிநுட்பம்—பயிற்சி முறையும் போதனா முறையும்.

7. **நியமன நியதிகள்.**—இந்நியமனங்கள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையவையுமாகும். விதவைகள் அனாதைகள் இளைப்பாறறுச் சம்பள நிதிககும் வேறு பொலிசுப் பகுதியிலுள்ள நிதிகளுக்கும் கட்டுப்பணங்கள் செலுத்தப்படவேண்டும்.

8. **சேவை நிபந்தனைகள் :**

(அ) தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மூன்று வருடங்களுக்குத தகுதிகாண் நிலையில் வைககப்படுவார்கள். அரசாங்க சேவையில் முனனமே இளைப்பாற்றுச் சம்பளத்தோடு கூடிய பதவிகளை வகிப்போராயின் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு " பதிலாக " நியமிககப்படுவர்.

(ஆ) தெரிவு செய்யப்பட்டவர்கள், அரசாங்கத்தின் பாஷைக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வருமுகமாக முன்னமே இயற்றப்பட்ட அல்லது இனிமேல் இயற்றபபடும் விதிகளுக்கு அமையவும் முக்கியமாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க பாஷைச் சட்டத்தை அமுலில கொண்டுவருவதற்கு அமையவும் நடக்க வேண்டியவர்களாக இருப்பார்கள்.

(இ) தெரிவு செய்யப்பட்டவர்கள் அரசாங்க சேவை அதிகாரச்சபை விதிகட்கும், நிதிப் பிரமாணங்கட்கும், நடைமுறைக் கைநூலில் உள்ள பிரமாணஙகட்கும், பகுதிக் கட்டளைகடகும், வேறு பொலிசுப் பிரதம அதிகாரியினாலோ அல்லது அரசாங்கத்தாலோ காலத்துக்குக் காலம் கொடுக்கப்படும் எநதக் கட்டளைகட்கும் அமைய நடக்க வேண்டியிருக்கும்.

(ஈ) அவர்கள தங்கள நியமனங்களில் உறுதிப்படுத்தப்படும்வரை விவாகம் செய்ய இயலாதிருபபினும் இரணடு வருடத் திருபதிகரமான சேவையின் பின் விவாகம் செய்ய விரும்புவோரின மனுக்களைப் பொலிசுப் பிரதம அதிகாரி பரிசீலனை செய்து அனுமதி அளிக்கப்படும்.

(உ) அவர்கள் வாகனங்களை இயக்கச் செல்லாத நேரங்களில் பொலிசு நிலையத்திலோ அல்லது வேறு அலுவலகங்களிலோ அதிகாரத்திலிருக்கும் பொலிசு உததியோகத்தர் குறிப்பிடும் பொலிசு அதிகாரத்துக்குட்படும் எநதச் சிறு வேலைகளையும் செய்ய வேண்டியவர்களாய் இருப்பார்கள்.

(ஊ) தகுதிகாண்/பதிலாகக் கடமையாற்றுகாண் காலமுடிவிலும் சம்பள உயர்வுக்கு முனபும் ஒவ்வொரு சாரதியும் அவரது வாகன ஓட்டுதலிலும், வாகனங்களை பாவனை செய்தலிலும் திருப்திகரமான திறமை உடையவரா என்று பரிசோதிக்கப்படுவர்.

9. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின் வருவனவற்றின் பிரதிகளையும் இணைகக வேண்டும் :—

(அ) பிறப்பு சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ;

(இ) வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டு ;
(ஈ) கல்வித்தகைமைச் சான்றிதழ்.

10. இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசெற்) I ம் பாகம், II ம் பிரிவின் தொடக்கத்தில் பிரசுரித்திருககும் பொதுச் சேவை பதவிகள் நியமனங்கட்குரிய நிபந்தனைகளைப் பார்ககவும்.

11. நியமிக்கப்படுவோருக்கு இவ்வசதிகள் அளிக்கப்படும் :—

(அ) இலவச குடிமனை,
(ஆ) இலவச கோலஉடை,
(இ) பெட்டி, படுக்கை, சப்பாத்து, அவைகளைச் சுத்தம் செய்யும் உப கரணங்கள் முதலியன.

12. ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தத்தம் பகுதித் தலைவர்கட்கூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

13. முடிவு திகதியின் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. மேல் குறிப்பிடப்பட்ட தேவைகட்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ். ஏ. திஸ்சநாயக்க,
பொலிஸ் பிரதம அதிகாரி.

பொலிஸ் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1.

**விண்ணப்பப் படிவம்**

1. விண்ணப்பகாரரின் முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.
2. விலாசம் (பெரிய எழுததுக்களில்) : ————.
3. (அ) பிறந்த திகதி :————.
   (ஆ) 1.1.66 ல் வயது : ————.
4. (அ) தேசிய இனம் : ————.
   (ஆ) இலங்கையராக வம்சாவழி வந்தவராக அல்லது பதிவு மூலமா : ————.
   (பதிவு மூலமாகவாயின் பதிவுச் சான்றிதழின் பிரதி அனுப்பப்படவேண்டும்)
   (இ) வம்சாவழி வந்த இலங்கையராயிருந்தால், கீழ்க்காணுவோரின் பிறந்த இடங்களைக் கூறுக : ————.
   (அ) விண்ணப்பக்காரர் : ————.
   (ஆ) விண்ணப்பக்காரரின் தகப்பன் :———— .
   (இ) விண்ணப்பக்காரரின் தகப்பன் வழிப்பூட்டன் :————9
5. என்ன வகுப்புச் சித்தியடைந்திருக்கின்றீர் : ————.
   (மொழியைக் குறிப்பிடுக)
6. (அ) வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டு இலக்கம் : ————.
   (ஆ) எவ்வித மோட்டார் வாகனங்கள் செலுத்துவதற்கு அனுமதிக் கப்பட்டிருக்கிறது : ————.
   (இ) பஸ் வண்டிகள் அல்லது லொரிகள் போன்ற பாரமுள்ள வாகனங்களைச் செலுத்தக்கூடியதாக வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டு விஸ்தரிக்கப்பட்டுள்ளதா ? அப்படி விஸ்தரிக்கப்பட் டிருப்பின் எந்தத் திகதி தொடக்கம் : ————.
7. மோட்டார் இயந்திரத்தொழில் பயிற்சியுண்டா ? : ————.
8. ஏதாவது விசேட தகைமைகள் : ————.
9. தற்போதைய உத்தியோகம் : ————.
10. அரசாங்கத்தின் கீழ் எப்போதாவது சேவை செய்ததுண்டா ? அப்படியாயின் கால எல்லைகளுடன விபரங்களும், திணைக்களம், பதவி, அத்திணைக்களத்தை எச்சந்தர்ப்பத்தில் விட்டு நீங்கியதென் பதையும் குறிப்பிடுக : ————.
11. எந்த இன்சூரன்ஸ் கம்பனியாவது எப்பொழுதாவது உம்மை " இன்சூர் " செய்ய மறுத்ததுண்டா ? : ————.
12. நற்சான்றுஇதழ்கள் கொடுத்த இருவரின் பெயர்கள், விலாசங்கள், பதவிப்பெயர்கள் : ————.
13. பொலிஸ் சேவையில் இதற்குமுன் சாரதி அல்லது கொஸ்தாப்பு வேலைக்கு விண்ணப்பித்தீரா ? அப்படியாயின் அதன் முடிவு என்ன ? முடியுமாயின் முன தொடர்பு குறிப்பிடுக : ————.
14. நீர் அல்லது உமது சுற்றத்தாரில் யாராவது ஏதாவது குற்றத்தில் சிக்கியோ, கட்டளை செய்யப்பட்டோ, சாட்டப்பட்டோ, அல்லது குற்றவாளி எனககாணப்பட்டோ இருக்கிறீர்களா ? : ————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னுல் கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

இடம் : ————.
திகதி : ————.

—308—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

## ஆயுள்வேத இலாகா

### மருந்து தயாரிப்பாளர் பதவிகள்

ஆயுள்வேத இலாகாவில் மருந்து தயாரிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப் பஙகள் கோரப்படுகின்றன.

2. சகல விண்ணப்பங்களும் 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ம் திகதிககு முனபோ அன்றோ கிடைக்கக் கூடியதாக, ஆயுள்வேத அதிபதி, கொழும்பு 8 என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3. **சம்பள விபரம்.**—வருடம் ஒன்றிற்கு ரூபா 2,100—120—ரூபா 3,060 வரை. ரூபா 2,760 பெறுமுன்னர் தகுதிகாண் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்.

4. **சேவையின் நிபந்தனைகள்.**—பதவி நிரந்தரமானதும் இளைப் பாறும் சம்பளம் உடையதுமாகும். தெரிவு செய்யப்பட்டவர் முதல் மூன்று வருட தகுதிகாண் பரீட்சையின் பின் நிரந்தரமாககப்படுவார்.

5. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கீழ்க்காணும் விபரங்களைப் பூரணமாக நிரூபிகக வேண்டும் :—

(அ) இலங்கையில் அல்லது இந்தியாவில் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட சுதேச வைத்தியக் கலலூரி ஒனறிலிருந்து தராதரப பததிரம் பெறறவராக இருத்தல் வேண்டும். அதிக மருந்து தயாரிக்கும் தகுதியுள்ளோருககுச் சலுகையுண்டு.

(ஆ) நற்குணமுடையோராகவும், சரீர திடமுடையவராகவுமிருத்தல் வேண்டும்.

(இ) 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் திகதியில் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும் 35 வயதுக்குட்பட்டவராகவும் இருததல வேண்டும்.

6. விண்ணப்பதாரர் கீழ்வருவனவற்றின் பிரதிகளையே எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் (மூலப்பிரதிகளல்ல) :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (குறிப்பு.—ஞானஸ்நானம் பெற்ற அல்லது பாடசாலைப் பிரவேசத்துக்காக வழங்கபபட்ட பிறபபுச் சானறிதழ் கள் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) உயர்தரக் கல்லூரித் தராதரப் பத்திரம், தொழிற் கல்வித் தராதரப் பத்திரஙகள்.

(இ) அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள் (விண்ணப்ப தாரர் அரசாங்க சேவையிலிருநதால்விண்ணப்பங்களை உப-பகுதி மூலமாக அனுப்புதல் வேண்டும்).

**குறிப்பு.**—விண்ணப்பமுடன அனுப்பும் பிரதிகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.

7. அரசாங்க வர்த்தமானியில் I ம் பகுதி, II ம் தொகுதியின் முற்பகுதியில் பிரசுரிககபபட்ட பொதுசன சேவையில் பதவி நியமனத் துககான பொது விதிகளையும் விண்ணப்பதாரர் கவனிப்பார்களாக. மாதிரி விண்ணப்பப பத்திரம் இணைக்கப்பட்டுள்ளது.

தற்காலிக ஆயுள்வேத அதிபதி.

ஆயுள்வேத இலாகா,
கொழும்பு 8,
1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 3 ந வ.

**மாதிரிப் பத்திரம்**

**மருந்து தயாரிப்பாளர் பதவிகள், ஆயுள்வேத இலாகா**

1. முழுப் பெயர் (தனித்தனி எழுத்தில்) :————.
   (அ) உண்மைப பெயர் :————.
   (ஆ) பிற பெயாகள் :————.
2. விலாசம் :————.
3. பிறந்த திகதியும் இடமும் :————.
   (பிறப்புப் பத்திரப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
4. சாதியம் :—— ——.
5. கல்வித் தகைமைகள் :————.
   (தராதரப் பத்திரப் பிரதிகள் இணைக்கவும்)
6. வைத்தியக் கல்வித் தகைமைகள் :————.
   (தராதரப் பத்திரங்கள் இணைககவும்)
7. முன்னைய வைத்திய அனுபவம் :————.
8. வேறு தகைமைகள் :————,

இதில் என்னுல் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமாகும். இவற்றில் எதும் பொய் அல்லது சரியல்ல எனக் காணப்பட்டால், நான் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியற்றவன் என ஏற்றுக்கொள்வதுடன் தெரிவுசெய்யப்பட்ட பின்னரும் அவ் விபரங்கள் சரியல்ல எனக் கண்டுபிடிக்கப்பட்டால், எவ்விதயுரிமையு மின்றி என்னை வேலையிலிருந்தும் நீககலாம் என்பதையும் ஏற்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி.————.

9-437—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வித்தியா பகுதி அறிவித்தல்

### ஆரம்ப பாடசாலைகளுக்கும் வகுப்புகளுக்கும் 1966 ம் ஆண்டு மாணாக்கர்களைச் சேர்த்தல்

ஆரம்ப பாடசாலைகளிலும் வகுப்புகளிலும் மாணாக்கர்கள் 1966 ம் ஆண்டு ஜனவரி மாதம் சேர்க்கப்படுவர். பாடசாலைகளில் மாணாக்கர்களைச் சேர்ப்பதற்கான ஆகக்குறைந்த வயது 1966 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ந் திகதி 5 வயதாக இருக்க வேண்டும். அதாவது 1.1.1961 அன்று அல்லது அதற்கு முன்னர் பிறந்த பிள்ளைகள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். தமது பிள்ளைகளுக்கு அனுமதி கோரும் பெற்றோர்கள் தமது வசிப்பிடத்துக்கு ஆகக்கிட்டவுள்ள பாடசாலைக்கு கீழ்க்காணும் படிவ முறையில் 1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

பிரவேசப் பரீட்சைகள் ஒன்றும் நடைபெறமாட்டா. குறித்த ஒரு பாடசாலைக்கு ஆகக்கிட்ட உள்ள பிள்ளைகளுக்கு அனுமதி விடயத்தில் முதன்மை அளிக்கப்படும்.

ஈ. எச். டி அல்விஸ்,
வித்தியாதிபதி.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 6 ந் உ.

#### மேலே குறிப்பிட்டுள்ள படிவம்

1. அனுமதி கோரும் வகுப்பு : ————.
2. கல்வியூட்டும் மொழி : ————.
3. பிள்ளையின் பெயர் : ————.
4. சாதியம் : ————.
5. பிறந்த திகதியும் இடமும் : ————.
6. பெற்றோர்களின் சமயம் : ————.
7. பாடசாலைக்குச் செல்லும் காலத்தில் பிள்ளை வதியும் விலாசம் : ————
8. மேற்குறித்த விலாசத்துக்கும் பாடசாலைக்குமுள்ள இடைத் தூரம் : ————.
9. பெற்றோரின் பெயரும் விலாசமும் : ————.
10. வாக்காளர் அட்டவணையில் உள்ளபடி பெற்றோரின் விலாசம் :————.
11. பெற்றோர் வாக்காளராகப் பதிவு செய்யப்படாதவிடத்து அதற்கான காரணம் : ————.
12. கடந்த மூன்று வருட காலத்தில் பிள்ளை வதிந்த இடம் :————.
13. இதற்கு முன் பிள்ளை கற்றுவந்த பாடசாலை/பாடசாலைகள் :————.
14. கடைசியாகச் சித்தி எய்திய வகுப்பு : ————.
15. பாடசாலை மாற்றத்திற்கான காரணம் : ————.
16. அனுமதி கோரும் பாடசாலைகளிலுள்ள மூத்த சகோதரர்கள்/சகோதரிகள் பற்றிய விபரங்கள் : ————.

மேலே நான் குறித்துள்ள விபரங்கள் யாவும் சரியானவையென உறுதியளிப்பதுடன் நான் கொடுக்கும் விபரங்கள் எவையேனும் பிழையாக இருப்பின் இப்பாடசாலையிலிருந்து எனது பிள்ளை அகற்றப்பட முடியுமென நான் அறிவேன். மேலும் மேற்கூறிய விலாசத்தில் நான் வதிந்துள்ளேன் என்பதை உரிய முறையில் நிரூபிக்கவும் நான் சம்மதிக்கின்றேன்.

————.
பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பம்.

திகதி : ————.

9–485—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை திணைக்களம்

### பழைய புதினத்தாள்கள், சுற்றுவதற்குரிய கடதாசிகள் விற்பனை

கொழும்பு, த. பெ. 530, உ. ஆ. சே. அ. ச. தலைவரால், 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் திகதி வரை 4 அந்தர் அளவு நிறையுள்ள சுற்றுவதற்குரிய பழைய புதினத்தாள்கள் வாங்குவதற்கான கூறுவிலைகள் வரவேற்கப்படும்.

(1) கொழும்பு கோட்டை, கபூர் கட்டடம் 1 வது மாடியிலுள்ள 29½ அறையில், கிழமை நாட்களில் அலுவலக நேரங்களில் இக்கடதாசிகளைப் பார்வையிடலாம்.

(2) மேற்குறிக்கப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பங்கள் எனக்குக் கிடைக்கும்படி தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் உள்ள தபாற் பெட்டியில் போடலாம். கூறுவிலைகள் விண்ணப்ப உறையின் இடது புறமேற்கோடியில், "பழைய புதினத்தாள்களை வாங்குவதற்கான விண்ணப்பம்" என்று எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(3) கேள்விப் படிவங்கள் வினியோகிக்கப்பட மாட்டா.

(4) ஒரு இறுத்தல் பழைய புதினத்தாள்கள் பழைய வர்த்தமானிகள் பழைய கடதாசிகள் ஆகியவற்றின் விலைகளைத் தனித்தனியே குறிப்பிட்டு விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

தலைவர்,
உ. ஆ. சே. அ. ச.

த. பெ. 530, கொழும்பு 1,
1965 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 31 ந் உ.

9–404—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

## இலங்கை போக்குவரத்துச் சபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 5, நாராகேன்பிட்டி, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1965 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி மு. ப. 10 மணிவரை, கோண்டாவில் (யாழ்ப்பாணம்) I ம் தர புதிய டிப்போவில் பிரதேச முகாமையாளர் காரியாலயத்தை அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார் மேலதிக விபரங்களுக்கு பொரலஸ் கமுவ, வெரகெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபை பிரதம சிவில் பொறியியலாளருக்கு விண்ணப்பிக்கவும்.

ரூ. 1,00,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்குமான வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட அரசாங்க, இ. போ.ச. கொந்தராத்துக்காரர்கள் மாத்திரமே கேள்விடத் தகவுடையவர்களாயிருப்பர். அவர்களுடைய சான்றோலைகள் பிரதம சிவில் பொறியியலாளரின் பரிசோதனைக்குக் காட்டப்படவேண்டும். சான்றோலைகள் அங்கீகரிக்கப்பட்டால், கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூ. 200 ஐக் கட்டவேண்டும்.

எல்லாக் கேள்விப்பத்திரங்களும் பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களில் செய்யப்படவேண்டும். கட்டுப்பணப் பற்றுச்சீட்டைக் காட்டுவதின் பேரில், 1965 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை இவர் கேள்விப்பத்திரச் சாதனங்களை வழங்குவார்.

செயலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5,
1965 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 4 ந் உ.

9–402—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

## தபாற் தந்திப் பகுதி

இழக்குறித்த பாவனையற்ற தபால் வான்களில் ஒன்றையோ பலவற்றையோ அல்லது எல்லாவற்றையுமோ வாங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றது

1. மொறிஸ் ஜே. தபால் வான் சீவி 2623.
2. ஒஸ்டின் வான் சீ.வி 105
3. பேஜோ வான் ஈ.வை 7349.
4. போட்தேம்ஸ் ஸ்டேசன் வகன் ஈ.என் 2173.

கொழும்பு 10, மக்கலம் வீதி மோட்டார் தபால் போக்குவரத்துப் பிரிவுப் பரிசோதகருடன் (தெலிபோன் இலககம் 4192) ஒழுங்கு செய்து இவ்வான்களைப பார்வையிடலாம்.

கொழும்பு, பிரதம தபாற் கந்தோர், தபால் அத்தியட்சகருக்கு விண்ணப்பம் செய்து பெற்ற பத்திரங்களில் மட்டுமே கேள்விப்பத்திரங்களை அனுப்புதல் வேண்டும். இப்பத்திரத்திலல்லாத கேள்விப்பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டா.

1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ந் திகதி பி. ப. 4 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள், தபாற் கந்தோர் ஒன்றில் கட்டுப் பணமாக ரூபா 100 கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே வழங்கப்படும். கேள்விப்பத்திரம் எற்றுக்கொள்ளப்பட்டதென்ற அறிவித்தல் எழுத்துமூலம் தபாற் கந்தோர்த் தலைமை அதிபதியிடமிருந்தோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதி நிதியிடமிருந்தோ கிடைத்து 14 நாட்களுக்குள் தபாற் கந்தோரொன்றில் கேள்விப் பத்திரத்தின் முழுப்பெறுமதியையும் கட்டுவதற்குத் தவறினல் அல்லது மறுத்தால் கட்டுப்பணத்தை அரசாஙகத்துக்கு இழக்கநேரிடும். ஏனைய எல்லாக் கட்டுப்பணங்களும் விற்பனவு முடிந்தவுடன் திருப்பிக்கொடுக்கப்படும்.

"பாவனையற்ற தபால் வான்களை (பிரதம தபாற் கந்தோர், தபாற் போக்குவரத்துச்சேவை) வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்" என இடது மேலமூலையில் குறிப்பிட்ட உறைகளில் உள்ளடக்கப்பட்டு, கேள்விப் பத்திரங்கள் தபாற் கந்தோர்த் தலைமை அதிபதிக்கு 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ந் திகதி மு. ப. 10 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பபபடல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம். அல்லது சீலிடப்பட்ட உறைகளில் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பதாரரால் அல்லது அவரது பிரதிநிதியால் கொழும்பு பிரதான தபாற் கந்தோர் தபால் அத்தியட்சரிடம் கையளிக்கப்பட்டு அதை எற்றுக்கொண்டதாக சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதம தபாற் கந்தோர் தபாற் தலைமை அதிபதியின் காரியாலய அறையில் 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ந் திகதி மு. ப. 11 மணிக்கு திறககப்படும். விண்ணப்பதாரர்கள் விருப்பப்படின் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

தேர்ந்தெடுக்கப்படும் கேள்விப்பத்திரகாரர் வாங்கிய வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு அவரே ஒழுங்குகள் செய்து கொள்ளல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களில் எவற்றையாவது அல்லது முழுவதையுமாவது கேள்வியின்றி நிராகரிக்க அரசாங்கத்துக்குப் பூரண உரிமையுண்டு.

ஏ. எல். பெரேரா,
பதில் தபாற் தந்தித் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1,
1965 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 3 ந் உ.

9–372—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

## நீர்ப்பாசன இலாகா

### அநுராதபுர உப–பிரிவு

கீழே குறிப்பிட்ட வேலைக்கு வடமத்திய மாகாண பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரால் 28.9.65 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கே. ப. இல. | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை ரூபா | கே. ப. கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| ஏ. எல். 11 | வெள்ளத்தால் சேதப்பட்ட இடங்கள் சீர்திருத்துதல்—மகாவிலாச்சியாத் திட்டம் | 25,000 .. | 25 |

2. மேலே குறிப்பிட்ட தொகைக்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்தோருக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள், அநுராதபுரம், பதவியா, மகாகணதருவை உபபிரிவுக் கந்தோர்களில் கந்தோர் நேரங்களில் 24.9.65 வெள்ளிக்கிழமை வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களுக்கு வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாங்கள் தற்போது இந்த இலாகாவில் செய்கின்ற ஒப்பந்த வேலைகளின் விபரங்களையும் எழுதிக் கொண்டு வரவேண்டும். ஒரு கச்சேரியிலோ அல்லது நீர்ப்பாசன உப பிரிவுக் கந்தோரிலேயோ கட்டுப்பணத்தைக் கட்டி பற்றுச்சீட்டு பெற்றவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

4. தேவையான விபரங்கள் உபபிரிவு பொறியியலாளரிடமிருந்து கந்தோர் நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். இரத்தினம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
அநுராதபுர உப–பிரிவு.

9–442—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

## நீர்ப்பாசன இலாகா

வடபகுதிப் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் வவுனியாவில் இருக்கும் தமது காரியாலயத்தில் 1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி வரைக்கும் முல்லைத்தீவு உப–பகுதியிலுள்ள கீழ்க்காணும் வேலைகளுக்கு வேண்டிய கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வார்.

| வேலை விபரம் | பதிவுத் தொகை ரூபா | கட்டுப் பணம் ரூபா |
|---|---|---|
| (க) வவனிக்குளத்து இடதுகரை வாய்க்காலின் 6 வது மைல் கட்டுதல் .. .. | 40,000 .. | .50 |
| (உ) தெகுளங் குளத்தில் மண் வேலை செய்வதும் ஸ்பில் கட்டுவதும் .. | 2`,000 .. | 25 |

2. சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப்பத்திரங்களை முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னர், வவனியா உப பகுதிக் காரியாலயங்களிலும் வடபகுதிப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் காரியாலயத்திலும் 1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ம் திகதி வெள்ளிக்கிழமை வரை அலுவலக நேரங்களிற் பெற்றுக்கொள்ளலாம். நீர்ப்பாசனப் பொறியியலாளர் தாங்கள் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுள்ளவர்களென அறிவதற்கு, ஒப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது, தங்கள் பதிவுப் புத்தகங்களையும், தாங்கள் தற்போது இவ்விலாகாவில் செய்துவரும் வேலை விபரங்களையும் அவற்றின் பெறுமதியுடன் சமர்ப்பிக்க வேண்டும். முதலாம் பந்தியிற் கொடுக்கப்பட்ட கட்டுப்பணத்தை மேற்கூறிய அதிகாரிகளின் காரியாலயத்திற் கட்டுபவர்களுக்கும் அல்லது அக்கட்டுப்பணத்தைக் கச்சேரியிற் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றவர்களுக்கும் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. மற்றெல்லா விபரங்களையும் ஒட்டுசுட்டானிலுள்ள முல்லைத்தீவு உப பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் அலுவலக நேரங்களிற் பெற்றுக்கொள்ளலாம்.

வி. பாலசுப்பிரமணியம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
முல்லைத்தீவு உப–பகுதி.

ஒட்டுசுட்டான்,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 23 ந் உ.

9–1061—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

## நீர்ப்பாசனத் திணைக்களம்

குருநாகல் தொகுதி, ஹக்வட்டுன ஓயாத் திட்டத்தில் தளபாடச் சாமான்கள் பரிவர்த்தனை செய்வதற்குக் கேள்விப்பத்திரங்கள் ஐப்பசி மாதம் 5 ம் திகதி காலை 10 மணி வரையும் குருநாகல், வடமேல் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 15,000/- அல்லது கூடிய தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மட்டும் கேள்விப் பத்திரம் கொடுக்கத் தகுதியுடையவராவர். ஹக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயத்தில் பெறக்கூடிய நகல்களில் கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் கொடுக்க வேண்டும். கொழும்பு தவிர்ந்த ஏனைய கச்சேரிகளிலோ, நீர்ப்பாசன அதிபர் காரியாலயத்திலோ அன்றி ஹக்வட்டுன ஓயா பொறியியலாளர் காரியாலயத்திலோ ரூபா 25/- சட்டுப்பணமாகக் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைக் கொடுத்து மேற்படித் திட்ட பொறியியலாளரின் காரியாலயத்தில் கேள்விப்பத்திர நகல்கள் 1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ம் திகதி மாலை 4.30 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

3. குருநாகல், வடமேல் பெரும்பாகப் பொறியியலாளர் காரியாலயத்தில், மேற்படி பெரும்பாக பொறியியலாளரால் கேள்விப்பத்திரங்கள் ஐப்பசி மாதம் 5 ம் திகதி 10 மணிக்குத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திரகாரர் அனுமதிக்கப்படுவர்.

4. மேலதிக விபரங்கள் ஹக்வட்டுனத் திட்ட பொறியியலாளரின் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். சிவலிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
ஹக்வட்டுன ஓயாத் திட்டம்.

மகுள்பொத்த,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 31 ந வ.

9-310—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

## 1965/66 ம் வருடத்தின் வெலிகாமம் உணவுக் களஞ்சியத்திற்கு உணவுப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்கும் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கும் கேள்விப்பத்திரம் கோரிய அறிவித்தலை ரத்துச் செய்தல்

27.8.65 ம் திகதி வெளியான 14,490 ம் இலக்க இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில், 1965/66 ம் நிதி வருடத்தில வெலிகம உணவுக் களஞ்சியத்திற்கு உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கும் கேள்விப்பத்திரம் கோரிய அறிவித்தலை இத்தால் ரத்துச் செய்கிறேன்.

எப். வீ. பீடர்ஸ்,
மாத்தறை பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி.

மாத்தறைக் கச்சேரி,
1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 3 ந வ.

9-367—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

## நீர்ப்பாசன இலாகா

### கொழும்பு உப-பகுதி

மேற் பெரும் பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் அவர்களால் (விசாலம் : மேற் பெரும் பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர், ஜாவத்தை ரோட், கொழும்பு 5) கேள்விகள் 5.10.1965 ம் ஆண்டு செவ்வாய்க்கிழமை காலை மணி 10 வரையும் கீழ் காணும் வேலைகளுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு உடனே திறக்கப்படும்.

| வேலையின் விபரம் | பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய தொகை | கட்டுப் பணம் |
|---|---|---|
| 1. கோறத்தொட்டை சிறு வெள்ளத் தடுப்பு கட்டுமானம் கட்டுவதற்கு | ரூ. 48,000/- | .. ரூ. 50/- |
| 2. முத்துராஜாவெல திட்டத்தின் கீழ் தும்மோதரையில், ஜாஎல அணையின் மேல் ஒரு இரண்டு குழாய் கட்டுமானம் கட்டுவதற்கு | ரூ. 22,000/- | .. ரூ. 25/- |
| 3. நண்வல மதபேன எல சிறு வெள்ளத் தடுப்பு கட்டுமானம் கட்டுவதற்கு | ரூ. 35,000/- | .. ரூ. 50/- |

(ii) மேற்கூறிய தொகைகளுக்கு இவ் இலாகாவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர் மட்டுமே இவ் வேலைகளுக்கு மனுச்செய்ய அருகதை உடையவர் ஆவர்.

(iii) வெற்றுக் கேள்விப் பத்திரங்கள் கீழ்காணும் காரியாலயங்களில் இருந்து 1.10.1965 ம் ஆண்டு வரையும் பெற்றுக் கொள்ளலாம். வெற்றுக் கேள்விப் பத்திரங்களுக்கு மனுச் செய்யும்போது, ஒப்பந்தக்காரர் தங்களுடைய பதிவுப் புத்தகங்களையும், தாங்கள் தற்போது இவ் இலாகாவில் செய்யும் வேலைகள் விபரத்தையும், மனுச் செய்ய அருகதை உடையவரா என்று நிர்ணயிக்கும் பொருட்டு இஞ்சினியர் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

1. கொழும்பு உப-பகுதி — ஜாவத்தை ரோட், கொழும்பு 5
2. களுத்துறை உப-பகுதி — களுத்துறை வடக்கு
3. கம்பக உப-பகுதி — கம்பகா
4. ரத்னபுர உப-பகுதி — கிடல்லான, ரத்னபுர

(iv) வெற்றுக் கேள்விப் பத்திரங்களுக்கு மனுச்செய்யும் பொழுது மேற் காணும் காரியாலயங்களிலோ அல்லது ஏதாவது கச்சேரியிலோ கட்டுமானப் பணம் கட்டிய பற்றுச் சீட்டு காட்டப்பட வேண்டும்.

(v) இவ் வேலைகளைப் பற்றிய கூடிய விபரங்கள் கொழும்பு உப-பகுதி நீர்ப்பாசன இஞ்சினியரிடம் இருந்து அறிந்து கொள்ளலாம்.

எம். றி. சி. பி. விஜெயதிலக்க,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
கொழும்பு உப-பகுதி.

நீர்ப்பாசன காரியாலயம்,
ஜாவத்தை ரோட்,
கொழும்பு 5,
3.9.65.

9-403—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

## கொக்கலை அரசாங்க வயோதிபர் இல்லம்

### சிகை அலங்கார ஒப்பந்தம்

1965 ஒக்ரோபர் 1 ந் திகதிமுதல் ஒரு வருட காலத்துக்கு பாகநேர சேவையாளராய் கொக்கலை அரசாங்க வயோதிபர் இல்ல வாசிகளுக்கு முகம் வழித்தற்கும், முடி வெட்டுதற்குமான ஒப்பந்தக் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கொக்கலை அரசாங்க வயோதிபர் இல்ல சுப்பிறின்றெண்டன்ற்றிடம் விபரங்கள் பெறலாம்.

2. ஒப்பந்தக் கேள்விகள் அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் கொக்கலை அரசாங்க வயோதிபர் இல்ல சுப்பிறினறெண்டன்ற்றுக்கு விலாசமிடப்பட்டு 16.9.65 ந் திகதி பகல் 12 மணிக்குமுன் அவருக்குக் கிடைக்கக்கூடியதாய் அனுப்பப்படவேண்டும். அவைகளை நேரே சுப்பிறின்றெண்ற்றுக்கு அத்தாபனத்தில கையளிக்கலாம், அல்லது பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்பலாம்.

3. ஒப்பந்தக் கேள்விகள் எழுதிக்கொடுப்பதற்கான மாதிரிப்பத்திரங்களை கொக்கலை அரசாங்க வயோதிபர் இல்ல சுப்பிறின்ற்றெண்ற்றிடம் பெறவேண்டும். ஒப்பந்த நிபந்தனைகள்பற்றி விளக்கம் தேவைப்பட்டால் மாதிரிப் பத்திரங்கள் கேட்கும் வேளையில் விளக்கமும் கொடுபடும்.

4. ஒப்பந்தக் கேள்வி மாதிரிப்பத்திரம் கொடுத்தற்குமுன் ரூ 10 கச்சேரியில் கட்டி பற்றுச்சீட்டு கொக்கலை அரசாங்க வயோதிபர் இல்ல சுப்பிறின்டென்ற்றுக்கு நேரில் கையளிக்கவேண்டும். இது தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் விஷயத்தில், அவருடைய பிணைக்காசில் ஒரு பாகமாகும். தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் ஒப்பந்தம் செய்து வேலையைத் தொடங்குமுன் மேலும் மீதிப் பிணைக்காசு ரூபா 40 கட்டும்படி கேட்கப்படுவர். தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டபின் ஏனைய விண்ணப்பக்காரரின் கட்டுப்பணங்கள் திருப்பிக்கொடுபடும்.

5. விண்ணப்பக்காரர் ஒரு முகவழிப்புக்கு, ஒரு முடிவெட்டற்கு எனும் விகிதம், மாத விகிதம் எனும் இரு விகிதப்படியும் செலவு குறிப்பிடவேண்டும். தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் இரண்டு விகிதங்களின்படியும் ஒப்பந்தம் செய்யக் கேட்கப்படுவர். ஒவ்வொரு மாதமும் முகம் வழித்தல் முடிவெட்டல்களின் தொகையைப் பார்த்து எந்த விகிதப்படி அரசாங்கத்துக்கு மலிவோ அந்த விகிதப்படி செலவு கொடுபடும். இரு விகிதங்களும் கொடாதவர்களின் விண்ணப்பங்களை சமூக சேவை அதிபர் நிராகரிக்க உரிமை உண்டு.

6. விண்ணப்பக்காரர் ஒருவர், அவருடைய விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டபின், ஒப்பந்தம் செய்ய மறுத்தால் அல்லது தவறினுலேனும், பிணைக்காசு கட்டும்படி கேட்கப்படும்போது அங்ஙனம் செய்யத் தவறினுலேனும், அவர் கட்டிய பிணைக்காசை இழப்பர்.

7. ஒப்பந்தக் கேள்வி ஒன்றையாயினும் எல்லாவற்றையுமாயினும் நிராகரிக்கவும் ஒரு வருடத்துக்கு அதிகமாகாத காலத்துக்கு ஓர் ஒப்பந்தக் கேள்வியை ஏற்றுக் கொள்ளவும் அரசாங்கத்துக்கு ஆட்சேபமற்ற உரிமை உண்டு.

சுப்பிறின்றெண்டன்ற்,
கொக்கலை அரசாங்க வயோதிபர் இல்லம்.

அரசாங்க வயோதிபர் இல்லம்,
கொக்கலை,
1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 3 ந் உ.

9-314/1—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

## கைதடி அரசாங்க வயோதிபர் இல்லம்

### விறகுகொண்டுவந்து கொடுத்தற்கான ஒப்பந்தம்

1965 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் திகதி முதல் ஒரு வருட காலத்துக்கு கைதடி அரசாங்க வயோதிபர் இல்லத்துக்கு விறகு கொண்டுவந்து கொடுத்தற்கான ஒப்பந்தக் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கைதடி அரசாங்க வயோதிபர் இல்ல சுப்றின்றெண்டன்ற்றிடம் விபரங்கள் பெறலாம்.

2. ஒப்பந்தக் கேள்விகள் அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் கைதடி அரசாங்க வயோதிபர் இல்ல சுப்றின்றெண்டன்றுக்கு விலாசமிடப்பட்டு 16.9.65 ந் திகதி பகல் 12 மணிக்குமுன் அவருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும். அவைகளை நேரே சுப்றினற்றெண்டன்றுக்கு அத்தாபனத்தில் கையளிக்கலாம் அல்லது பதிவுசெய்யப்பட்ட தபாலில் அனுப்பலாம்.

3. ஒப்பந்தக் கேள்விகள் எழுதிக் கொடுத்தற்கான மாதிரிப் பத்திரங்களை கைதடி அரசாங்க வயோதிபர் இல்ல சுப்றின்றெண்டன்ற்றிடம் பெறவேண்டும். ஒப்பந்த நிபந்தனைகள் பற்றி விளக்கம் தேவைப்பட்டால், மாதிரிப்பத்திரங்கள் கேட்கும் வேளையில் விளக்கமும் கொடுபடும்.

4. ஒப்பந்தக் கேள்வி மாதிரிப்பத்திரம் கொடுத்தற்கு முன் ரூபா 10/- கச்சேரியில் கட்டி பற்றுச்சீட்டு கைதடி அரசாங்க வயோதிபர் இல்ல சுப்றின்றெண்டன்றுக்கு நேரில் கையளிக்கப்படவேண்டும். இது, தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் விஷயத்தில், அவருடைய பிணைக்காசில் ஒரு பாகமாகும். தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் ஒப்பந்தம் செய்து வேலையைத் தொடங்குமுன் மேலும் மீதிப்பிணைக்காசு ரூபா 90/- கட்டும்படி கேட்கப்படுவர். தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டபின் ஏனைய விண்ணப்பக்காரரின் கட்டுப் பணங்கள் திருப்பிக்கொடுபடும்.

5. வனப்பகுதி கோப்பாய் வழியோர சாலையிலிருந்து விறகு ஏற்றி கைதடி அரசாங்க வயோதிபர் இல்லத்துக்குக் கொண்டு வந்து இறக்கி அடுக்க அந்தர், கனயார் எனும் இரு விகிதப்படியும் செலவு குறிப்பிட வேண்டும். இரு விகிதங்களும் கொடாமை முதலிய காரணங்களுக்காக விண்ணப்பங்களை சமூகசேவை அதிபர் நிராகரிக்க உரிமை உண்டு.

6. விண்ணப்பக்காரர் ஒருவர், அவருடைய விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டபின், ஒப்பந்தம் செய்ய மறுத்தால் அல்லது தவறினுலேனும், பிணைக்காசு கட்டும்படி கேட்கப்படும்போது அங்ஙனம் செய்யத் தவறினுலேனும், அவர் கட்டிய பிணைக்காசை இழப்பர்.

7. ஒப்பந்தக் கேள்வி ஒன்றையாயினும் எல்லாவற்றையுமாயினும் நிராகரிக்கவும் ஒருவருடத்துக்கு அதிகமாகாத காலத்துக்கு ஓர் ஒப்பந்தக் கேள்வியை ஏற்றுக்கொள்ளவும் அரசாங்கத்துக்கு ஆட்சேபமற்ற உரிமை உண்டு.

சுப்றின்றெண்டன்ற்,
கைதடி அரசாங்க வயோதிபர் இல்லம்.

அரசாங்க வயோதிபர் இல்லம்,
கைதடி,
1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 3 ந் உ.

9-314/2—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

## மீறிகம அரசாங்க வயோதிபர் இல்லம்

### சவப்பெட்டிகளை கொடுத்தற்கான ஒப்பந்தம்

1965 ஒக்ரோபர் 1 ந் தேதி முதல் ஒரு வருட காலத்துக்கு மீறிகம அரசாங்க வயோதிபர் இல்லத்துக்கு சவப்பெட்டிகள் கொடுத்தற்கான ஒப்பந்தக் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. மீறிகம அரசாங்க வயோதிபர் இல்ல சுப்றின்றெண்டன்ற்றிடம் விபரங்கள் பெறலாம்.

2. ஒப்பந்தக் கேள்விகள் அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் மீறிகம அரசாங்க வயோதிபர் இல்ல சுப்றின்றெண்டன்ற்றுக்கு விலாசமிடப்பட்டு 16.9.65 ந் திகதி பகல் 12 மணிக்குமுன் அவருக்குக் கிடைக்கக் கூடியதாய் கொடுக்கப்படவேண்டும். அவைகளை நேரே சுப்றின்றெண்டற்றுக்கு அத்தாபனத்தில் கையளிக்கலாம், அல்லது பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்பலாம்.

3. ஒப்பந்தக் கேள்விகள் எழுதிக் கொடுத்தற்கான மாதிரிப்பத்திரங்களை மீறிகம அரசாங்க வயோதிபர் இல்ல சுப்றின்றெண்ற்றிடம் பெறவேண்டும். ஒப்பந்த நிபந்தனைகள் பற்றி விளக்கம் தேவைப்பட்டால், மாதிரிப்பத்திரங்கள் கேட்கும் வேளையில் விளக்கமும் கொடுபடும்.

4. ஒப்பந்தக் கேள்வி மாதிரிப்பத்திரம் கொடுத்தற்குமுன் ரூபா 10 சமூக சேவைப் பகுதியில் கட்டி பற்றுச்சீட்டு மீறிகம அரசாங்க வயோதிபர் இல்ல சுப்றின்றெண்டன்ற்றுக்கு நேரில் கையளிக்கப்படவேண்டும். இது, தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் விஷயத்தில், அவருடைய பிணைக்காசில் ஒரு பாகமாகும். தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் ஒப்பந்தம் செய்து வேலையைத் தொடங்குமுன் மேலும் மீதிப் பிணைக்காசு ரூபா 15 கட்டும்படி கேட்கப்படுவர். தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டபின் ஏனைய விண்ணப்பகாரரின் கட்டணங்கள் திருப்பிக்கொடுபடும்.

5. விண்ணப்பக்காரர் (அ) மரப்பெயர் குறிப்பிட்ட அல்பிஸ்ஸிய அல்லது ஏற்றம்ப அல்லது நுகட்டன அல்லது கொன்னையில் செய்த ஒரு சவப்பெட்டியின் விலை, (ஆ) மேலே குறிப்பிட்ட வித சவப்பெட்டி ஒன்று தாபனத்தில் கொண்டுவந்து கொடுக்க அதன் விலை, (இ) மேலே குறிப்பிட்ட வித சவப்பெட்டி ஒன்று விண்ணப்பக்காரரின் வேலைத்தலத்தில் கொடுக்க அதன் விலை ஏன்பவற்றைக் குறிப்பிடவேண்டும்.

6. விண்ணப்பக்காரர் ஒருவர் அவருடைய விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டபின் ஒப்பந்தம் செய்ய மறுத்தால் அல்லது தவறினுலேனும், பிணைக்காசு கட்டும்படி கேட்கப்படும் போது அங்ஙனம் செய்யத் தவறினுலேனும் அவர் கட்டிய பிணைக்காசை இழப்பர்.

7. ஒப்பந்தக் கேள்வி ஒன்றையாயினும் எல்லாவற்றையுமாயினும் நிராகரிக்கவும் ஒரு வருடத்துக்கு அதிகமாகாத காலத்துக்கு ஓர் ஒப்பந்தக் கேள்வியை ஏற்றுக்கொள்ளவும் அரசாங்கத்துக்கு ஆட்சேபமற்ற உரிமை உண்டு.

சுப்றின்றெண்டன்ற்,
மீறிகம அரசாங்க வயோதிபர் இல்லம்.

அரசாங்க வயோதிபர் இல்லம்,
மீறிகம,
1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 3 ந் உ.

9-314/3—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## அறிவித்தல்

**பிரசித்த ஏலவிற்பனை**

**பொலிஸ் அதிகாரிகளால் பாவிக்கப்பட்ட ஆடைகள் முதலியன**

பொலிஸ் அதிகாரிகளால் பாவிக்கப்பட்ட ஆடைகள் முதலியன புரட்டாதி மாதம் 18 ம் திகதி (18.9.65) காலை 9 மணியளவில் கம்பஹ பொலிஸ் நிலையத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் விடப்படும் பொருட்கள் சில பின்வருமாறு:—

| | |
|---|---|
| தோல் சப்பாத்து கறுப்பு .. .. | 322 |
| தொப்பி .. .. .. | 185 |
| தோல் பூட்ஸ் கறுப்பு .. .. | 88 |
| மழைக் கோட்டுகள் கறுப்பு .. .. | 18 |
| காக்கி கோட்டுகள் .. .. | 47 |
| காக்கி புஸ் கோட்டுகள் .. .. | 18 |
| காக்கி கால்சட்டைகள் .. .. | 76 |

மேற்கூறப்பட்ட பொருட்களை விரும்பியவர்கள் புரட்டாதி மாதம் 15 ம் திகதி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணியளவிலும் பார்வையிடலாம். வேண்டப்பட்ட பொருட்களுக்கு உடனே முதல் கொடுக்கப்பட வேண்டும்.

டி. எப். எல். பி. ஆர் சேனநாயக,
உப பொலிஸ் அதிபர்,
வடமேல் மாகாணம்.

கம்பஹ.

1965 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 2 ந் வ.

9-262—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

## கட்டுத் திணைக்களம்—ஏல விற்பனை

கல்முனை அரசினர் மரக்காலையில் இருக்கும் 904·6 கன அடி கொண்ட 95 முதிரை, சவண்டலை, கல்லொதி, குனை முதலிய மரங்கள் மட்டக்களப்பு வன பரிபாலன அதிகாரியால் 23.9.65 காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கேட்க விரும்புவோர் ஏல விற்பனைக்கு முன்பதாகவே மரங்களை பார்வையிடும்படி கோரப்படுகின்றனர்.

ஏலவிற்பனை பற்றிய முழு விபரங்களும் கீழ் கையொப்பமிட்டவரிடமோ அல்லது கல்முனை அரசினர் மரக்காலையிலோ பெற்றுக்கொள்ளலாம்.

க. அருள்செல்வம்,
மாவட்ட வன பரிபாலன அதிகாரி,
மட்டக்களப்பு.

மாவட்ட வன பரிபாலன காரியாலயம்,
மட்டக்களப்பு,
1965 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 26 ந் வ.

9-395—9.9.65 ந் திகதிய வர்த்தமனி இல. 14,501

---

## கட்டுத் திணைக்களம்—ஏல விற்பனை

குலனுகே வளியோர மரக்காலையினும், குலனுகே கிராமச்சங்க அங்கத்தவருடைய வீட்டுக்கருகாமையிலும் 241·8 கன அடி கொண்ட 19 முதிரை, சவண்டலை முதலிய மரங்களும், 12·2 கன அடி கொண்ட அறுவை மரங்களும் மட்டக்களப்பு வன பரிபாலன அதிகாரியால் 6.10.65 காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கேட்க விரும்புவோர் ஏல விற்பனைக்கு முன்பதாகவே மரங்களைப் பார்வையிடும்படி கோரப்படுகின்றனர்.

ஏல விற்பனை பற்றிய முழு விபரங்களும் கீழ் கையொப்பமிட்டவரிடமோ அல்லது கல்முனைக் காட்டுக் கந்தோரிலோ பெற்றுக்கொள்ளலாம்.

க. அருள்செல்வம்,
மாவட்ட வன பரிபாலன அதிகாரி.

மாவட்ட வன பரிபாலன காரியாலயம்,
மட்டக்களப்பு,
1965 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 30 ந் வ.

9-396—9.9.65 ந் திகதிய வர்த்தமனி இல. 14,501

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.